# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 11.01.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தை அடைந்த, மேலும் முன்னவர்களுடன் இணைக்கப்பட்ட பின்னவர்களாகிய அந்த தூய கூட்டத்தின் சில நபர்களின் கனவுகள் மற்றும் சம்பவங்களை எடுத்துரைப்பேன். இந்த ஒவ்வொரு சம்பவமும் இந்த சஹாபாக்களின் தூய்மை, இறைவனுடன் தொடர்பு மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் கொண்ட அன்பின் வெளிப்பாடாக இருக்கக்கூடிய வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றது.

முதல் அறிவிப்பு ஹஸ்ரத் டாக்டர் அப்துல் மஜீத் கான் சாஹிப் உடையதாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மரணத்திற்கு சில வருடங்களுக்குப் பிறகு நான் கனவில் கண்டேன். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோரை மக்ரான் குல்தஸ்தானில் இருக்கும் போது எனது வீட்டில் பார்க்கிறேன்.

அவர் கூறுகின்றார்: நான் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கண்டேன். மேலும் கனவில் இவர் யார்? என வினவினேன். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அறிந்தவராக இருந்தார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இவர் ஹஸ்ரத் உமர் (ரலி) எனக் கூறினார்கள். மீண்டும் வினவிய போது இவர்கள் ரஸுல் கரீம் (ஸல்) எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் கூறுகின்றார்: நான் எனது தலையை வெட்கத்தினால் கீழே தாழ்த்தியவாறு பார்த்த போது அழகான அந்த மூவரும் மறைந்து போயினர். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவத்தில் ஒன்றுபோல் இருப்பதாகக் கண்டேன். அதாவது, அன்னார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நிழலாக வந்துள்ளதற்கு அல்லாஹ் சான்று பகர்ந்திருக்கின்றான்.

**அடுத்து மியான் குலாம் ஹுஸைன் சாஹிப் பட்டி உடைய அறிவிப்பாகும். கூறுகின்றார்கள்:**

நான் ஃபத்ஹ்பூரில் கல்வி பயின்று வந்தேன். இரண்டு, மூன்று வருடங்களுக்குப் பிறகு எனது நண்பர் மியான் லால்தீன் அராயின் தூய நல்ல உண்மையைப் பேசக்கூடிய மனிதர் ஆவார். இவருக்கு இரவில் கனவு வந்தது. அதில் நான் அதாவது மியான் லால்தீன் சாஹிப், ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது சன்னதியில் வந்துள்ளேன். வந்தவுடன் நான் ஹுஸுரிடம் அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறினேன். ஹுஸுர் அவர்கள் வ அலைக்கும் ஸலாம் எனக் கூறிய உடனே மியான் லால்தீன் வந்து விட்டீரா? எனக் கேட்டார்கள். அதற்கு நான் ஆமாம் வந்து விட்டேன் என்றேன். ஹுஸுர் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்கள். அவர்களது வலது பக்கத்தில் மற்றொரு நாற்காலியில் ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். ஹுஸுர் அவர்கள், மியான் லால்தீன் இந்த மனிதரை தெரியுமா? எனக் கேட்டார்கள். இவர் மெஹ்தி ஆவார். அவரை கண்டறிந்து கொள் என்றார்கள். அதற்கு நான் ஜனாப் தெரிந்து கொண்டேன் என்றேன்.

மர்ஹூம் மியான் லால்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் மஹ்தியின் பக்கம் பார்த்த போது அவர்களது முகத்திலிருந்து ஒளியின் கதிர்கள் வெளிப்படுவது தெரிந்தது. இதற்குப் பிறகு கண் விழித்தேன். இந்தக் கனவைக் கண்டதினால் மியான் லால்தீன் சாஹிபுடைய கவனம் உடனே இறைவன் பக்கம் திரும்பியது. பிள்ளைகளுக்கு தொழுகையைப் பற்றி அறிவுறுத்தினார்கள். தாமும் பள்ளிவாசலுக்கு அதிகமாக சென்றார்கள். மக்கள் இவரை பைத்தியம் எனக் கருதினார்கள். பைத்தியத்திற்காக சிகிச்சை செய்ய ஆரம்பித்தனர். மவ்லவி சுல்தான் சாஹிப் அஹ்மதி மர்ஹூம் ஒரு சிறந்த மருத்துவர் ஆவார். அவர் இந்தக் கனவைக் கேட்டதும் உடனே காதியானுக்கு பயணம் செய்தார்கள். அந்த சமயத்தில் மஹ்தியின் வருகையைக் குறித்து பிரபல்யமாக பேசப்பட்டது. மவ்லவி சாஹிப் புறப்பட்ட போது மியான் லால்தீன் சாஹிப் அவரிடம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எனக்காக துஆ செய்ய வேண்டுங்கள் என்றார்கள். மவ்லவி

சாஹிப் அதாவது மவ்லவி சுல்தான் ஹாமிது சாஹிப் பைஅத் செய்து விட்டு திரும்பி வந்த போது, மியான் லால்தீன் சாஹிப் அவரிடம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எனக்காக துஆ செய்யும்படி வேண்டினீர்களா என்றார்கள். அதற்கு மவ்லவி சாஹிப், மறந்து விட்டேன் சகோதரரே என்றார். சரி, நீங்கள் காதியான் சென்று வந்துள்ளீர்கள். ஆனால் நான் செல்லவில்லை. நீங்கள் என்னிடம் காதியானின் நிலைமைகளைக் குறித்து கேளுங்கள் என்றார். அதாவது நான் காதியான் போகக்கூட இல்லை. ஆனால் நான் கனவில் கண்ட காட்சிகள் மூலம் அனைத்து நிலைமைகளையும் கூற முடியும் என்றார். அந்த வகையில் அவர் கனவில் கண்ட காதியானின் நிலைமைகளை எடுத்துரைத்தார். மவ்லவி சாஹிப் ஆச்சரியப்பட்டார்.

மவ்லவி சாஹிபுடைய விசயங்களை அதாவது காதியானுடைய சம்பவங்களை கேட்ட பிறகு அறிவிப்பவர் கூறுகின்றார்: நான் மூன்று பேர். அதாவது முன்ஷி கரம் இலாஹி கர்தாவர். ஊரில் வயல்களை அளந்து விளைச்சலுக்கு வரி விதிப்பதற்காக நியமிக்கப்பட்டவரை கர்தாவர் என்று கூறுவார்கள். மியான் ரம்ஜான் தீன் நியானா மற்றும் நானும் பைஅத்திற்கான கடிதத்தை எழுதினோம். (மொழியாக்கம் செய்யக்கூடியவர்கள் சில விசயங்கள் பற்றி எங்களுக்கு புரியவில்லை எனக் கூறுகின்றனர். அதனால் தான் நான் சில இடங்களில் விளக்கங்களையும் கூறுகின்றேன்.)

கூறுகின்றார்: இதற்கு சில மாதங்களுக்குப் பிறகு மியான் லால்தீனும், நானும் மியான் முஹம்மது யார் மற்றும் முராது பாக்பான் அதாது முராது என்ற பெயரைக் கொண்ட ஒரு தோட்டக்காரர் ஆகிய நால்வரும் காதியான் செல்ல வேண்டும் என்று உறுதிகொண்டோம். நடந்து சென்று இரவில் மியான் சன் உடைய ஸ்டேசன் சென்றடைந்தோம். பாதி இரவில் எழுந்து நஃபில் தொழுதோம். பிறகு இரவில் மியான் லால்தீன் சாஹிப் கனவு ஒன்றைக் கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கழுதையை அழைத்து வருவதால் என்ன பயன் என்று கூறினார்கள். அதாவது மியான் லால்தீன் இரவில் கனவு கண்டார். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கழுதையைக் கொண்டு வருவதால் என்ன பயன் என்று கூறினார்கள். அதன்படி மியான் லால்தீன் சாஹிப் அவர்கள் நண்பர்களிடம் நம்மில் யார் நயவஞ்சகமான ஈமானைக் கொண்டுள்ளார்? என வலியுறுத்திக் கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கழுதையை ஏன் கொண்டு வந்துள்ளீர்கள் எனக் கூறியுள்ளார்கள். அதன்படி நிச்சயமாக நம்மில் நயவஞ்சகமான ஈமானைக் கொண்டுள்ளவர் இருக்கின்றார் என்றார். அந்த நால்வரையும் தனித்தனியாக கேட்டார். முராது பாக்பான் கூறினார். முராது என்ற பெயரைக் கொண்ட தோட்டக்காரன் கூறினான். நான் உனக்காக தான் வருகின்றேன். நீ அந்த இடத்தில் தங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் வருகின்றேன். மேலும் நான் பைஅத் எதுவும் செய்யமாட்டேன் என்றார். நினைத்தது போன்று அவ்வாறே நடந்தது. நாங்கள் வண்டியில் பயணம் செய்து பட்டாலாவில் இறங்கி மியான் லால்தீனுடைய வழிகாட்டலுடன் காதியான் வந்தடைந்தோம். நாங்கள் காதியானின் உயர்வான பள்ளிவாசலில் சரியாக மதிய வேளையில் நுழைந்தோம். அது உணவிற்கான நேரமாக இருந்தது. துணிகள் போன்றவற்றை அங்கேயே வைத்தோம். இவர் மஸ்ஜிது முபாரக் உடைய ஜன்னலைப் பற்றிக் கூறுகின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

கூறுகின்றார்: நாங்கள் துணிகள் போன்றவற்றை அங்கேயே வைத்தோம். உணவு தயாராக உள்ளது. எல்லா சகோதரர்களும் வாருங்கள் என ஒரு நபர் குரல் கொடுத்ததும் ஏறக்குறைய நாங்கள் அந்த சமயத்தில் 10, 12 பேர் இருந்தோம். அனைவரும் ஒன்றிணைந்தோம். அதிலிருந்து ஒரு நபர் உங்களது வீடு எந்த மாவட்டத்தில் உள்ளது என எங்களிடம் கேட்டார். மியான் லால்தீன், முல்தானில் உள்ளது என்றார். உங்களுக்கு இந்தப் பக்கம் வருவதற்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது என அவர் மீண்டும் கேட்டார். மேற்கூறப்பட்ட அனைத்து கனவுகளையும் மியான் லால்தீன் அவரிடம் கூறினார். அதற்கு அவர் இப்போது நீர் ஹஸ்ரத் சாஹிபை அடையாளம் காண முடியுமா? என்றார். மியான் லால்தீன் சாஹிப் இன்சா அல்லாஹ் கண்டிப்பாக என்றார். அந்த வகையில் இவரை சோதிப்பதற்காக உபசரிப்பிற்காக அங்கு வந்து சென்று கொண்டிருந்த புதிய நபர்களைக் காண்பித்து இவர்தான் மஸீஹ் மவ்வூதா? எனக் கேட்டார். அதற்கு லால்தீன் சாஹிப் இவர் இல்லை என்றார். இதுபோன்று பல்வேறு நபர்களை காண்பித்து இவரா? எனக் கேட்டார். அதற்கு இல்லை எனக் கூறினார். கனவில் பார்த்த நபர் வேறொருவர் என்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜன்னல் வழியாக எட்டி மஸ்ஜிதை பார்த்த போது, மியான் லால்தீன் உடனே இவர் தான் ஹஸ்ரத் சாஹிப் எனக் கூறினார். நான் கனவில் கண்ட அதே ஒளி எனக்கு தென்பட்டது என்றார். அதற்கு அந்த நபர் நீர் சரியாகத்தான் கூறுகின்றீர் என்றார்.

ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது இஸ்மாயில் சாஹிப் மற்றும் பாபு மீரான் பக்ஷ் சாஹிப். இவர்கள் இருவரும் சஹாபாக்கள் ஆவர். இஸ்மாயில் சாஹிபும் சஹாபி ஆவார். பாபு மீரான் பக்ஷ் சாஹிப் (ரலி) பற்றி கூறுகின்றார்கள். 313 சஹாபாக்களுடைய பட்டியலில் இடம்பெற்ற பாபு மீரான் பக்ஷ் சாஹிப் நோயாளி ஆனார். இவரது சிகிச்சைக்காக ஹுஸுரிடம் சென்றோம். அங்கு ஒரு மாதம் முழுவதும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த சமயங்களில் ஹுஸுருடன் சந்திப்பும் நடைபெற்று வந்தது. பைஅத்திற்கு முன்பு நடந்தை கூறுகின்றார். அவர் கூறுகின்றார்: மூன்று நாள் இரவில் கனவு வந்தது. கடைசி இரவில் மிகவும் ஆவேசமாக ஒரு மனிதர் கையில் வாளை ஏந்தியவாறு சீக்கிரம் பைஅத் செய் என பயமுறுத்துகின்றார். அந்த வகையில் இவர் காலையில் பைஅத் செய்தார். அங்கு சிகிச்சைக்கு பிறகு, பைஅத் செய்த பிறகு ஹுஸுருடன் கடிதம் மூலம் தொடர்பு இருந்தது.

ஹஸ்ரத் மியான் சோனே கான் சாஹிப் கூறுகின்றார்கள்: எனது வீட்டில் ஒரு எருமை இருந்தது. அது குட்டி ஈன்றது. கிராமத்து வழக்கத்திற்கேற்ப முதல் நாள் பாலில் கீர் செய்து, (ஃபத்ஹ் அலி சா என்ற ஒரு செய்யத் இருந்தார்) அவருடைய கபரில் படைப்பார்கள். இது பீர், பக்கீர்களை வணங்கக் கூடியவர்களுடைய வழக்கமாகும். கூறுகின்றார்: எனது மனைவியும் கீர் சமைத்தார். எனது தந்தையையும், சிறிய தந்தையையும் சாப்பிடுவதற்காக அழைத்தாள். அதற்கு அவர்கள், அவன் காஃபிராகி விட்டான். அதனால் நாங்கள் சாப்பிட மோட்டோம் என்றனர். அதாவது மியான் சோனே கான் பைஅத் செய்திருந்தார். அதனால் அவர் காஃபிராகி விட்டார். அவரது வீட்டின் விலங்கின் கீர் (பாலினால் செய்யப்பட்ட உணவு) சாப்பிட மாட்டோம் என்றனர். எனது மனைவி என்னிடம் நான் அவர்களை கீர் சாப்பிடுவதற்காக அழைத்தேன். அதற்கு அவர்கள் நாங்கள் சாப்பிட மாட்டோம். அவன் காஃபிராகி விட்டான் என பதில் கூறியதாகக் கூறினாள்.

அந்த நாளில் வெளியிலிருந்து ஒரு மருத்துவர் வந்திருந்தார். அவர் எனது சிறிய தந்தையின் நண்பராவார். அவர் சந்திப்பதற்காக வந்திருந்தார். நான் கீர் –ஐ ஒரு பாத்திரத்தில் போட்டு அந்த மருத்துவருக்கு முன்பாக வைத்தேன். அவர் துஆ செய்து அதனை சாப்பிட்டார். அந்த மருத்துவர் என்னிடம் என்ன கற்றுக் கொடுத்தார்? என்று கேட்டார். அதாவது பைஅத் செய்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ன கற்றுக் கொடுத்தார்கள்? என்று கேட்டார். அதற்கு நான், ஐவேளை தொழுங்கள். ஸலவாத் ஓதுங்கள். மேலும் என்னை உண்மையான மஹ்தி என நம்புங்கள் என கூறினார் என்றேன். அந்த மருத்துவர், எந்த தரூதை ஓதுதவன் மூலம் அல்லது குர்ஆனின் எந்த வசனத்தை ஓதுவதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஸியாரத் கிடைக்கும். மேலும் நீங்கள் எந்த தரூதை செய்கின்றீர்கள் என்று கேட்டிருக்க வேண்டும் என்றார்.

நான் அன்றைய தினமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மருத்துவர் கேட்ட கேள்விகளைப் பற்றி கடிதம் எழுதினேன். நான் சிஸ்தியானா பிரிவைச் சேர்ந்தவனாவேன். அவர்களது திக்ர் பாப் அப்னஸ் அதாவது அல்லாஹு, திக்ர் லாயிலாஹ மேலும் சிஸ்தியானுடைய குடும்ப திக்ர் சுல்தானுல் அஸ்கார் என்று நம்பக் கூடியதைச் செய்து வந்தேன். எனக்கு தெரிந்த வரையில் அதனை நான் ஓதி வந்தேன். இதனைத் தவிர எனக்கு தெரிந்த வஸீபாக்களை இத்துடன் எழுதினேன். எல்லா வஸிபாக்களையும் எழுதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பினேன். ஹுஸுர் அவர்கள் இதற்கு இவ்வாறு பதில் எழுதினார்கள். எனது காலத்தின் ஆரம்பம் முஹம்மது ரஸுல் (ஸல்) அவர்களுடையதாகும். அதாவது நபி (ஸல்) அவர்களது காலம் என்னுடையதாகும். நீங்கள் எழுதிய திக்ர்களை செய்வது வீணானதாகும். இது தடை செய்யப்பட்டதாகும். இந்தக் காலத்தில் இது எந்த விளைவையும் ஏற்படுத்தாது. எனது திக்ர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்து வந்த திக்ர் ஆகும். அதாவது சூரா ஃபாத்திஹாவை ஓதுவது, தரூது சரீஃபை ஓதுவது, அதிகமாக இஸ்திக்ஃபார் செய்வது, லா ஹவ்ல ஓதுவது, இது தான் பலன் தரக்கூடியதாகும். இதிலிருந்து பலன் கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் ஹதீஸ் சரீஃபில் வந்துள்ள அனைத்து தரூது வஸிபாவையும் செய்து வருகின்றேன். அந்த அனைத்தையம் சரி என நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்: நபிகள் நாயம் (ஸல்) அவர்களைச் சந்திக்க விரும்பினால் தரூது சரீஃபை ஓதும் போது, நிபந்தனை என்னவென்றால் ரஸுல் (ஸல்) அவர்களுடைய நேசத்தை உள்ளத்தில் நிலைநிறுத்துங்கள். மற்ற ஏனைய நேசத்தினை பிள்ளைகளின் மீதான நேசத்தை விட்டு விடுங்கள். ரஸுல் (ஸல்) அவர்களுடைய நேசத்தினை உள்ளத்தில் அதிக அளவு ஏற்படுத்துங்கள்.

பிறகு நான் தரூது ஹஸாரா ஓத ஆரம்பித்தேன். (அப்போது வரை அஹ்மதியல்லாதவர்களின் தாக்கம் அவருக்கு இருந்து வந்தது.) இதுவும் இவர்களுடைய ஒரு வழக்கமாகும். அதாவது தஹஜ்ஜுத் நேரத்தில் ஓராயிரம் முறை தரூது சரீஃபை ஓதுவார்கள். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் என்று

கூறிய பிறகு சொந்தமாக சில வார்த்தைகளை கூறுவார்கள். இவ்வாறு கூறுவது தரூது ஹஸாரா ஆகும். இவர் அப்போது புதிய அஹ்மதியாக இருந்தார்.

அவர் கூறுகின்றார்: நான் இந்த தரூது சரீஃபை ஓத ஆரம்பித்தேன். தரூது ஹஸாரா என்பது தஹஜ்ஜுத் தொழுகை நேரத்தில் ஆயிரம் முறை தரூது சரீஃப் ஓதுதல் என்பதாகும். இவ்வாறு ஓதுவதன் மூலம் நபி (ஸல்) அவர்களைப் பார்க்க முடியும் என்பது பிரசித்தி பெற்றிருந்தது. எவ்வாறாயினும், நான் ஓத ஆரம்பித்தேன். சில நாட்கள் தான் கழிந்தது. கனவு மற்றும் ஆன்மீகக் காட்சியில் மிர்ஸா சாஹிப் வந்தார்கள். எனது கையைப் பிடித்து தன்னுடன் அழைத்துச் சென்றார்கள். நபி (ஸல்) அவர்களுடைய சன்னதியில் என்னை ஆஜர்படுத்தினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அருளுக்குரிய அரியணையில் அமர்ந்திருந்தார்கள். எங்களுக்கு பின்வரிசையில் இடம் கிடைத்தது. ஜனாப் மிர்ஸா சாஹிப் உரத்த குரலில் ஈருலகத் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களே! நாங்கள் சோனே கானிற்கு நல்ல ஏற்பாட்டைச் செய்துள்ளோம் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், சோனே கான் சம்பந்தமாக செய்த ஏற்பாட்டை நாம் ஏற்றுக் கொண்டோம் என்று கூறினார்கள். அவர் இங்கே உட்கார்ந்திருக்கட்டும். அவர் தனது கனவை கூறுகின்றார்.

அவர் கூறுகின்றார்: நான் அங்கு சில பெரியவர்களைச் சந்தித்தேன். மிர்ஸா சாஹிப் அனுமதி பெற்று என்னை திரும்ப அழைத்து வந்தார்கள். அதாவது கனவில் அந்த கூட்டத்திலிருந்து திரும்ப அழைத்து வந்து எனது வீட்டில் விட்டார்கள். முன்னர் காலஞ்சென்ற வலிமார்கள், ஹஸ்ரத் மிரான்ஜி செய்யத் பன்சரீஃப் ஆகியவர்கள் ஆன்மீகக் கனவில் பைஅத் செய்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள். மிர்ஸா சாஹிபுக்கும் எனக்கும் ஒரே தோற்றம் தான். அவரும் மஹ்தி, நாமும் மஹ்தி ஆவோம் என்றார். ஒரு பெரியவர் சுல்தான் கபுர்தலாவைச் சேர்ந்தவர் ஆவார். கனவில் அவரைக் கண்டேன். அந்த சான்றோர் நல்ல மனிதர் ஆவார். அவர் கூறினார்: அவர் மஹ்தி மற்றும் ஈஸா ஆவார். எனக்கும் அவருக்கும் ஒரே தோற்றம் தான். இவர் தனது கனவைப் பற்றி கூறுகின்றார். அவர் தொடர்ந்து கூறுகின்றார்: கரம்தீனுடன் மிர்ஸா சாஹிபின் வழக்கு நடந்த போது எனது பகுதியில் அஹ்மதி யாரும் இல்லை. மக்கள் அனைவரும் மிர்ஸா சாஹிப் இந்த வழக்கில் கைதாகி விடுவார் என்றனர். அந்த நேரத்தில் துக்கத்துடன் ஹாஜிபூரைச் சேர்ந்த மியான் ஸபூர் ரஹ்மானிடம் வந்தடைந்தேன். அப்போது ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் கவலைப்படாதே! தரூது சரீஃபை ஓதி துஆ செய் என்றார்கள். நான் அதிகமாக தரூது சரீஃப் மற்றும் அல்ஹம்து சரீஃபை ஓதினேன். துஆவும் செய்து வந்தேன். சிறிது நாட்களிலேயே கனவில் ஒரு நபர் ஒரு பையனின் சடலத்தை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார். அந்த சடலம் ஒரு துணியால் மூடப்பட்டிருந்தது. அதனை என் அருகில் வைத்தார். நான் இது என்ன எனக் கேட்டேன். அதற்கு அவர், பார் என்றார். நான் அதன் துணியை அவிழ்க்க ஆரம்பித்தேன். அதாவது அந்த சடலத்திலிருந்து துணியை அகற்றிய போது நான், இது குரங்கின் உருவமாகும் என்றேன். இவர் மிர்ஸா சாஹிபுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர் ஆவார் என்றேன். நான் கனவில் மாடியில் அமர்ந்திருந்தேன். அந்த செத்த சடலத்தை கீழே தள்ளினேன்.

பிறகு கூறுகின்றார்: நான் இந்த கனவை மிர்ஸா சாஹிபிற்கு எழுதி அனுப்பினேன். அதற்கு ஹுஸுர் அவர்கள், இதனைப் போன்றே அவரது பொய்யும் வெளிப்படும் என்றார்கள். அவ்வாறே அவரது திரை விலக்கப்பட்டது. டாக்டர் அப்துல் கனி சாஹிப் கடக் அவர்கள் அஞ்சாமே ஆத்தம் என்ற நூலைப் படித்த பிறகு கூறுகின்றார்கள். நான் தற்போது நூல்களை வாசிக்க ஆரம்பித்து விட்டேன். மேலும் தொழுகை கடைபிடிக்கவும் ஆரம்பித்து விட்டேன். இதற்கு முன்பு எனக்கு இந்த வழக்கம் இருந்ததில்லை. நான் இந்தக் காலகட்டத்தில் ஒரு ரூஃயா கண்டேன்.

அதில் நான் ஓரிடத்தில் நிற்கின்றேன். எனக்கு முன்பாக ஒரு மினாரா உள்ளது. மினாராவுடன் ஒரு கதவும் உள்ளது. அது பழைய காலத்து வேலைப்பாடு கொண்டுள்ள ஒரு மரக்கதவு ஆகும். அதனைத் திறந்து உள்ளே செல்ல ஆசைப்படுகின்றேன். ஆனால் அது திறக்கவில்லை. நான் அதனை வேகமாக தள்ளினேன். அப்போது நான் கதவு திறந்தவுடன் சேர்ந்து உள்ளே சென்றது போல் தோன்றியது. ஆனால் நான் விழவில்லை. அங்கு நான் பெரிய பெரிய பூங்காக்கள் இருப்பதைக் காண்கின்றேன். அதில் நீள பாதைகளும், மலர் படுகைகளும் இருந்தன. பூக்களின் செடிகள் வைக்கப்பட்டுள்ளன. அதனைக் கடந்து சென்றவாறு நான், ஒரு வண்டி லாஹூர் செல்வதற்கு தயாராக இருக்கின்றது. ஆனால் என்னிடம் டிக்கட் இல்லை என்பது போன்று தோன்றுகிறது. இவர் தனது கனவைக் கூறுகின்றார். இந்த சமயத்தில் மாநிறமுடைய நபர் ஒருவர் இருந்தார். அவர் எனக்கு டிரைவராக தெரிந்தார். அவர் என்னிடம் கூறினார். உன்னிடம் டிக்கெட் இல்லையென்றால் பரவாயில்லை. இரயிலின் கம்பியைப் பிடித்து தொங்கிக் கொள் என்றார். ஆனால் தூங்கி விடக் கூடாது என்றார். அந்த வகையில் நான் அந்தக் கம்பியைப் பிடித்துக் கொண்டேன். எனக்கு தூக்கம் வருவது போன்று தோன்றுகின்றது. அப்போது நான்

கம்பியைப் பிடித்தும் இருக்கின்றேன். தூங்கி விடக் கூடாது என்பதற்காக கையைக் கொண்டு கண்களை கசக்கிக் கொண்டிருந்தேன். இந்த சமயத்தில் நான் கண் விழித்தேன். இந்த அனைத்தையும் அவர் கனவில் பார்த்துள்ளார்.

நான் இந்த ரூஃயாவை முஹம்மது அமீன் சாஹிபிடம் கூறினேன். அவர் கூறினார். உங்கள் மீது சத்தியம் வெளிப்பட்டு விட்டது. நீங்கள் பைஅத் செய்து விடுங்கள் என்றார். முஹம்மது அமீன் சாஹிப் ஓர் அஹ்மதியாக இருந்தார். நான் காதியான் சென்று பைஅத் செய்கின்றேன் என்றேன். அதற்கு அவர் வாழ்க்கைக்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. அவர் தனது பையிலிருந்து ஒரு கார்டை எடுத்துக் கொடுத்து உடனே எழுதுங்கள் என்றார். இந்த வகையில் நான் பைஅத்திற்கான கடிதத்தை எழுதினேன். முஹம்மது அமீன் சாஹிப் அதனை போஸ்ட் செய்யச் சென்றார்கள். இது 1907 –ல் நடந்த சம்பவமாகும். இதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு பதில் வந்தது. ஹுஸூர் அவர்கள் எனது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அதில் அல்லாஹ் உறுதிப்பாட்டை வழங்குவானாக என்றும் தொழுகையை முறைப்படி தொழ வேண்டும், தரூது சரீஃபையும் ஓத வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்தது.

கண்ணியத்திற்குரிய மியான் சராஃபத் அஹ்மது சாஹிப் தனது தந்தை மர்ஹூம் ஹஸ்ரத் ஜமாலுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் பற்றி எழுதுகின்றார்கள்:

தந்தையார் பைஅத் செய்வதற்கு முன்பும் அவருக்கு இல்ஹாம்கள் இறங்கிக் கொண்டிருந்தன. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு இந்த நிலை மேலும் அதிகரித்தது. அஹ்மதிய்யத்தின் அருளின் விளைவாக அன்னாருக்கு இறைவனைப் பார்க்கக் கூடிய பாக்கியமும் கிடைத்தது. அன்னாருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஸியாரத்தும் அதிகமாக கிடைத்தது. ஹஸ்ரத் உமர் மற்றும் சான்றோர்களுடைய ஸியாரத்தும் அவ்வப்போது கிடைத்து வந்தது.

அவர் தனது தந்தையைப் பற்றி எழுதுகின்றார்: ஒருநாள் மஸ்ஜித் முஹல்லா தாருர் ரஹ்மத்தில் ஏதோவொரு விசயத்தில் சில நண்பர்களுக்கு ரூஃயாவைக் கூறினார்கள். அதில் ஒரு நண்பர் மாஸ்டர் ஜனாப் அல்லாஹ் தத்தா சாஹிப் மர்ஹூம் குஜராத்தி ஆவார். அவர் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு சஹாபி இருந்தார். அவருக்கு தினமும் ரஸூல் (ஸல்) அவர்களைக் கனவில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்து வந்தது. காலையில் அவர் அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தெரிவிப்பார். அதாவது தினமும் நபி (ஸல்) அவர்களைக் கனவில் சந்திப்பார். காலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்தக் கனவு அல்லது ரூஃயாவை எடுத்து வைப்பார். ஹுஸூர் அவர்கள் தமது பேனாவால் சரி அல்லது நல்லது என எழுதுவார்கள்.

தந்தையார் கூறினார்கள்: எனது உள்ளத்தில் சய்த்தான் குழப்பத்தை ஏற்படுத்தினான். எப்படி தினமும் முஹம்மது (ஸல்) அவர்களுடன் சந்திப்பு நடைபெறுகிறது. எப்படி பார்க்க முடிகிறது? என குழப்பம் ஏற்பட்டது. இந்த குழப்பம் அதிகமாவதற்கு முன்பாக இறைவன் தனது அருளால் என்னைப் பிடித்து மூழ்குவதிலிருந்து காப்பாற்றினான். இறைவன் எவ்வாறு காப்பாற்றினான். கூறுகின்றார்கள்: இரவில் நான் கனவில் என்னை நபி (ஸல்) அவர்களுடைய மஸ்ஜிதில் பார்க்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அங்கு அமர்ந்திருக்கின்றார்கள். கூட்டத்திலிருந்து ஒருவர், ஹுஸூர்! மக்காவைப் பற்றி, இதில் நுழைபவர் அமைதிக்குள் வந்து விடுவார் என வந்துள்ளது. ஆனால் தங்களுக்கு அமைதி தரக்கூடியதாக இல்லையே? என்றும் கேள்வி கேட்டார். அதாவது நபி (ஸல்) அவர்களுக்கு இது அமைதி தரக்கூடிய இடமாக இல்லையே? மதீனா சென்று அடைக்கலம் புக வேண்டியதாயிற்று! என்றார். இவர் தனது கனவைக் கூறுகின்றார். இதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்காவை எவரும் வெற்றி பெற முடியாது என வந்துள்ளதே. ஆனால் நான் இதனை வென்றுள்ளேன். ஏனென்றால் என்னை வெளியேற்றியதன் காரணமாக எனக்கு இதனை வெல்வது எளிமையாகி விட்டது என்று பதில் கூறினார்கள். இன்னும் கனவின் பகுதிகள் உள்ளன. குறைவான அறிவின் காரணமாக முழுமையாக அனைத்தையும் நினைவில் கொள்ள முடியவில்லை. மறந்து விட்டேன்.

பிறகு தந்தையார் கூறினார்கள்: இதற்குப் பிறகு நான் கண் விழித்தேன். தஹஜ்ஜுது உடைய நேரமாக இருந்தது. தஹஜ்ஜுது தொழுதேன். பிறகு பள்ளிவாசலுக்கு சென்றேன். காலையில் அதே நண்பர் மீண்டும் வந்தார். இரவில் நடந்த விசயங்களை நோட்டில் எழுதியிருந்தார். அதனை ஹுஸூருக்கு முன்பாக வைத்தார். ஹுஸூர் அவர்கள் தனது பேனாவினால் அதில் கையொப்பம் இட்டார்கள். நான் அதனைப் படித்தேன். நான் கூறிய அதே கனவு தான் அதில் இருந்தது. அதாவது நான் கனவில் கண்ட அதே கேள்வியும் அதே பதிலும் தான் இருந்தது.

இவருக்கு வந்த கனவு தான் இவரது நண்பருக்கும் வந்தது. அதை ஹுஸூருக்கு எழுதி காண்பித்தார். இந்த வகையில் இறைவன் எனக்கு உதவி புரிந்தான். என்னை அழிவிலிருந்து காப்பாற்றினான். அவர் கூறிய கனவுகள் அனைத்தும் உண்மையான கனவுகள் ஆகும் என்று எனக்கு புரிய வைத்தான்.

**இதனைப் போன்று மவ்லவி ஃபஸ்ல் இலாஹி சாஹிப் கூறுகின்றார்கள்:**

1892 –ல் அவர் பைஅத் செய்துள்ளார். அமிர்தசரஸில் மர்ஹூம் ஜனாப் காஸி செய்யது அமீர் ஹுஸைன் சாஹிபிடம் வந்ததன் மூலம் அஹ்மதிய்யத்தைப் பற்றி எனக்கு தெரிய வந்தது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சத்தியத்தை தெரிந்து கொள்வதற்காக ரமலான் மாதம் கடைசி பத்து நாட்களில் இஃதிகாஃப் உடைய காலத்தில் மிகவும் அதிகமாக துஆவும், இஸ்திகாராவும் செய்தேன். துஆவில் இறைவா! எனக்கு நான் தற்போது இருக்கக்கூடிய நிலை சரியா? அல்லது மஸீஹ் மவ்வூது என்று வாதம் புரியக்கூடியவர் சரியா? என எனக்கு தெரியப்படுத்துவாயாக! என வேண்டினேன். இதன்படி எனக்கு காட்டிக் கொடுக்கப்பட்டது. அதாவது நான் தொழுகின்றேன். ஆனால் முகம் கிப்லாவை நோக்கி இருக்கவில்லை. சூரியனின் வெளிச்சம் கிரகணம் காரணமாக மிகவும் குறைவாக உள்ளது. இதன் மூலம் தற்போதைய நிலைமை விளக்கப்பட்டுள்ளது.

மறுநாள் இசா தொழுகைக்குப் பிறகு மீண்டும் அழுது அழுது துஆ செய்தேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கனவில் துஆ செய்வதற்கு சரியான நேரம் பாதி இரவுக்கு பிறகுள்ள நேரமாகும் என்றார்கள். எவ்வாறு குழந்தை அழுவதன் காரணமாக தாயின் மார்பிலிருந்து பால் சுரக்கிறதோ அவ்வாறே நடு இரவுக்கு பிறகு இறைவனிடம் மன்றாடுவதன் மூலம் இறைவனுடைய கருணை அருகில் வருகிறது என்றார்கள். அதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டேன்.

அதற்குப் பிறகு கூறுகின்றார்: ஹுஸூரின் தூய நெருக்கத்தின் மூலமாக எந்த அளவு பயன் கிடைத்தது என்றால் ஒருநாள் தஹஜ்ஜுத் தொழுகையில் நான் ஸஜ்தாவில் துஆ செய்து கொண்டிருந்தேன். மயக்க நிலையில் ஒரு கஷ்ஃப் வடிவில் அது இருந்தது. ஒரு தூய மனிதரின் வடிவில் ஒரு வானவர் என்னிடம் வந்தார். அவரது கையில் அழகிய வெள்ளைநிற குவளை தண்ணீரால் நிரம்பியிருந்தது. மற்றொரு கையில் அழகான கத்தி ஒன்றிருந்தது. அவர் என்னிடம், உங்களது உட்புற தூய்மைக்காக நான் வந்துள்ளேன் என்றார். அதற்கு மிகவும் நல்லது. நீங்கள் எவ்வாறு நாடுகின்றீர்களோ அவ்வாறே தூய்மை செய்யுங்கள் என்றார். அந்த வகையில் அவர் முதலில் கத்தியால் எனது நெஞ்சை கிளித்தார். அந்தக் குவளையின் தூய்மையான நீரினால் நன்றாக சுத்தமாக்கினார். ஆனால் நான் எந்த விதமான வேதனையையும் உணரவில்லை. நான் பயப்படவுமில்லை. அவர் சென்ற பிறகு நான் சுப்ஹ் தொழுகை தொழ வேண்டும் என நினைக்கின்றேன். ஆனால் உடல் முழுவதும் கிளிக்கப்பட்டுள்ளதே! எவ்வாறு நான் தொழுவேன்! அதனால் கை கால்களை அசைக்க ஆரம்பித்தேன். எந்த விதமான வேதனையும் ஏற்படவில்லை. பிறகு கண் விழித்தேன். அதன் பின்னர் சுப்ஹ் தொழுகையை தொழுதேன்.

**ஹஸ்ரத் மியான் ஜான் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் இறையருளால் பல்வேறு விசயங்களைக் கேட்ட பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சிறு வயதிலிருந்தே ஒருபோதும் எதிர்க்கவில்லை. எனது வயது ஏறக்குறைய 15, 16 இருக்கும் போது நான் எனது தந்தையுடன் முல்தான் சாவுனி வந்தேன். ஏனென்றால் எனது தந்தை ஒரு சேட்டிடம் வேலை செய்து வந்தார்கள். நான் அப்போது 4 அனா கூலிக்கு வேலை செய்து வந்தேன். அந்த சமயத்தில் முல்தானில் ரமலானின் பெருநாள் வந்தது. ரமலானுடைய நோன்பையும் வைத்தேன். பெருநாள் தொழுகை தொழுத பின்னர் நடைபயிற்சி செய்த பின்னர் அஸர் தொழுகைக்குப் பிறகு எனக்கு உறக்கம் வந்தது. நான் கட்டிலில் உறங்கினேன். அது கோடை காலமாக இருந்தது. அஸர் நேரத்தில் உறங்கிய நான் காலை வரை உறங்கிக் கொண்டேயிருந்தேன். சஹர் நேரத்தில் எனக்கு கனவு வந்தது. அந்தக் கனவு இதுவாகும்.

நான் பெருநாள் அன்று எனது கிராமம் ஹேலாவிற்குச் சென்றேன். நாங்கள் அனைவரும் எனது தந்தையுடன் சேர்ந்து பெருநாள் தொழுகை தொழக்கூடிய மைதானத்திற்கு (ஈத்கா திடலுக்கு) செல்கின்றோம். எங்களது கிராமத்தின் ஈத்கா கிராமத்திலிருந்து மேற்குப் பகுதியில் உள்ளது. ஆனால் கனவில் காட்டப்பட்ட ஈத்கா கிழக்குப் பகுதியில் இருந்தது. எனவே நாங்கள் அனைவரும் கிழக்குப் பகுதியை நோக்கி நடந்தோம். தொழுகைக்குப் பிறகு திரும்ப வீட்டிற்கு வரும்போது வழியில் மணல் குன்று ஒன்றிருந்தது. அதில் ஒரு சதுர கல் மிகவும் அழகாக இருந்தது. அதன் மீது நான் உட்கார்ந்தேன். நான் அதனை ஒருபுறமாக அகற்ற விரும்புகின்றேன். ஆனால் அது மிகவும் பாரமாக இருந்தது. முதல்முறை என்னால் அதனை அகற்ற முடியவில்லை. பிறகு

இறைவனுடைய பெயரைக் கூறி பிஸ்மில்லாஹ் சொல்லி முயற்சித்த போது அந்தக் கல் ஒருபுறமாக நகர்ந்தது. அதன் கீழ் ஒரு கதவு இருந்தது. அது மூடி இருந்தது. நான் கதவைத் திறந்தேன். முன்னால் ஒரு அறை தென்பட்டது. நான் அந்த அறையில் நுழைந்தேன். அதன் பின்னர் அங்கு மிகவும் அழகான 3, 4 காலணிகள் இருப்பதைக் கண்டேன். நானும் எனது காலணியை அங்கு கழற்றினேன். புதிதாக இருந்த எனது காலணியும் அதைப்போன்றே இருந்தது. அதன் பின்னர் நான் உள்ளே நுழைந்தேன். அங்கு ஒரு விரிப்பு மிகவும் அழகாக விரிக்கப்பட்டிருந்தது. இரண்டு அழகான பையன்கள் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நான் அவர்களிடம் சென்ற போது அங்கிருந்த ஒரு சான்றோர் எனது பெயரைக் கூறி என்னை அழைத்து நாங்கள் உமக்காக வெகுநேரம் காத்திருக்கின்றோம் என்றார். நானும் வருவதற்கு தயாராகத்தான் இருந்தேன். ஆனால் வேலையின் காரணமாக நேரம் கிடைக்கவில்லை. தற்போது நேரம் கிடைத்தது. உடனே வந்து விட்டேன் என்றேன்.

பிறகு நான் இரண்டாவது அறையினுள் நுழைந்தேன். அங்கு ஒரு பெரியவர் பச்சை நிற ஆடை அணிந்தவாறு நாற்காலியில் அமர்ந்திருந்தார். முன்னால் மேஜையில் ஒரு ரேஹாலில் வைத்து திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவர் தனது ஆடை பச்சையாக இருந்தது. நான் அவருக்கு முன்னால் சென்றதும் அவர் எனது பெயரைக் கூறியவாறு நாம் உமக்காக வெகு நேரமாக காத்திருக்கின்றோம் என்றார். மேலும் அன்புடன் என்னை தனது அரவணைப்பில் எடுத்துக் கொண்டார். அந்தப் பெரியவர் நீங்கள் திருக்குர்ஆன் ஓதியிருக்கின்றீர்களா? என்றார். அதற்கு நான் பாடமாக 7 பாகம் வரை ஓதியிருக்கின்றேன். மீதமுள்ளவற்றை தானே படித்தேன் என்றேன். பிறகு அவர் திருக்குர்ஆனை திறந்து, என்னை ஓதுங்கள் என்றார். அவர் திருக்குர்ஆனை திறந்த போது எனது பார்வையில் பட்ட முதல் வசனம் தில்க ரஸுலு ஆகும். அந்த பெரியவரது வாயிலும் தில்க ரஸுலு என்ற வசனமே இருந்தது. அதாவது இவர் அந்த ரஸுல் என்பதாகும். அதன் பிறகு அந்தப் பெரியவர் நான் செல்கின்றேன் என்று எனது பார்வையிலிருந்து மறைந்து விட்டார். நான் இந்த மனிதர் யார்? என ஆச்சரியப்பட்டேன். மறைவிலிருந்து இவர் கிழ்ர் (அலை) என்றும் பையன்கள் இமாம் ஹஸன் (ரலி) ஆவார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது.

இதன் பின்னர் நான் கண் விழித்தேன். இதற்குப் பின்னர் இந்தக் கனவின் காரணமாக இரண்டு மூன்று நாட்கள் நிம்மதியற்றிருந்தேன். இதனைப் பற்றி யாரிடம் கேட்டாலும் எவரும் பதில் கூறவில்லை. இதற்குப் பிறகு 8 வருடங்களுக்குப் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்த பின்னர் எனது கனவு நிறைவேறியது. கிழ்ர் (அலை) உடைய தோற்றத்தில் எனது கனவில் வந்தவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். அல்ஹம்துலில்லாஹ். நான் எனது கண்களால் பார்த்தேன். உண்மையாகவே ஹுஸுர் இந்தக் காலத்தின் நபி ஆவார்கள்.

**ஹஸ்ரத் மேஸ்திரி தீன் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

மாலை நேரத்தில் எனது உள்ளத்தில் யாரெல்லாம் ஆரம்பத்தில் பைஅத் செய்தார்களோ அவர்களது பெயரெல்லாம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. என்னுடைய பெயர் இல்லையே! என சிந்தனை தோன்றியது. இரவில் கனவு வந்தது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். கையில் பேனா வைத்திருந்தார்கள். வலது தொடையில் பதிவேடு இருந்தது. ஹுஸுர் அவர்கள் உங்களது பெயர் என்ன? தொழில் என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு நான் மேஸ்திரி தீன் முஹம்மது தொழில் ‘கொல்லன்’ என்றேன்.

நான் ளுஹர் நேரத்தில் ஹுஸுரிடம் இந்தக் கனவை கூறினேன். ஹுஸுர் அவர்கள் உங்களது பெயர் எழுதப்பட்டுள்ளது என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிபும் ஹஸ்ரத் முதல் கலீஃபாவும் அமர்ந்திருந்தார்கள். அப்போது மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் எனது பெயர் எங்கும் எழுதப்படவில்லை எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் எந்தவிதமான பதிலும் கூறவில்லை.

ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்: 1904 –ல் எனக்கு கனவில் ஒரு வயல் காண்பிக்கப்பட்டது. அதனைச் சுற்றி ஜான் அளவு தூரத்தில் பெரிய பெரிய உறுதியான மரங்களுடைய வரிசை இருந்தது. வயலுக்குள் செல்வதற்கு ஒரேயொரு வழி தான் இருந்தது. அந்த வயலில் மிகவும் பச்சை பசேரென்று கோதுமை பயிர் இருந்தது. வயலுக்கு வெளியில் ஒரு காளை மாடு மரங்களுக்கு இடையில் இந்தப் பயிரை மேய்வதற்காக நின்று கொண்டிருந்தது. மேலும் மரங்களுக்கு இடையிலுள்ள இடைவெளியினுள் தனது தலையை நுழைத்து அந்தப் பயிரை மேய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தது. ஆனால் ஒவ்வொரு துளையிலிருந்து தோற்றுப் போனது. உள்ளே செல்வதற்குரிய வழியில் அது நுழையவில்லை.

கனவில் இந்தக் காட்சியை பார்த்தன் மூலம் இந்த காளை மாடு கதவைத் தேடாமல் தனது நோக்கத்தை அடைய முடியாமல் போனதோ அதனைப் போன்றே இறைவனை அடைவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கதவு போன்றவர்கள் ஆவார்கள். எப்போது வரை ஒரு மனிதர் இந்தக் கதவு வழி செல்ல மாட்டானோ அதுவரை இறைவனை அடையமாட்டான் எனப் புரிய வந்தது. ஏனென்றால் இந்தக் காலத்தின் இமாமாக இறைவன் நபி (ஸல்) அவர்களைத்தான் நியமித்துள்ளான்.

ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒருமுறை நான் கனவில் விருந்தினர் மாளிகையின் சேவகர் சேக் ஹாமித் அலி சாஹிப். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பழைய பணியாளர் ஆவார். அவரை அவர் அரபு நாட்டின் உலர்ந்த பேரீச்சம் பழங்களை விருந்தினர்களுக்கு விளம்புவதற்காக ஒரு கூட்டத்தில் நிற்கின்றார்கள். அது வெண்ணிற துணியினால் மூடப்பட்டுள்ளது. அவர் அதனை கொடுக்க ஆரம்பித்த போது பேரீச்சம்பழம் போன்று பருமணாகவும் புதியதாகவும் சாறு நிறைந்ததாகவும் இருக்கின்றது. இதனை அவர் இது அரபு நாட்டின் உலர்ந்த பேசீச்சம் பழங்கள் ஆகும். இதனைப் புதுப்பித்து உங்களுக்கு கொடுக்கப்படுகிறது எனக் கூறி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக மார்க்கத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளான் என்பதாகும்.

ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்: ஜனவரி 19, 1911 -ல் நான் கனவில் ஒரு சீக்கிய பையனைக் கண்டேன். அவனுக்கு ஜின் பிடித்திருந்தது. அதனை மக்கள் மந்திரங்கள் மூலமாக விரட்டிக் கொண்டிருந்தார்கள். ஜின்னை விரட்டுவதற்கு மந்திரங்களை கையாளுபவர்களைப் போன்று எரிந்து கொண்டிருக்கக் கூடிய நெருப்பை கொண்டு ஜின்னை பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். இதன் மூலம் ஜின் பயந்து ஓடி விட வேண்டும் என நினைத்தனர். ஆனால் அது ஓடவில்லை. கனவில் எனக்கு இதற்குரிய சிகிச்சை கூறப்பட்டது.

அதாவது ஒரு வெள்ளை காகிதத்தை எடுத்து அதில் ஜின் உடைய உருவத்தை வரைய வேண்டும். பிறகு குல் அவூது பிரப்பின்னாஸ் ஓதி பேனா மூலமாக ஜின் உடைய உருவத்தில் கோடுகளைப் போட்டு அதன் உருவத்தை வெட்ட வேண்டும். இவ்வாறு மீண்டும் மீண்டும் குல் அவூது பிரப்பின்னாஸ் ஓதி உருவத்தைப் பேனாவால் வெட்டுவதன் மூலம் ஜின் துண்டு துண்டாகி விடும். இதன்படி நான் கனவிலேயே இவ்வாறு செய்ய ஆரம்பித்தேன். அதன் மூலம் ஜின் துண்டு துண்டாகியது. பையனும் ஆரோக்கியம் அடைந்தான். அவனுக்கு அதாவுல்லாஹ் என பெயர் சூட்டப்பட்டது. நான் கனவிலிருந்து விழித்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த கவிதை எனது நாவில் இருந்தது.

இவைகள் நான் எடுத்த சில அறிவிப்புகள் ஆகும். அல்லாஹ் இந்த சான்றோர்களின் தர்ஜாவை உயர்த்துவானாக! மேலும் இவர்களது ஈமானின் உறுதிப்பாட்டை இவர்களது சந்ததிகளிலும் நிலைபெறச் செய்வானாக!

நான் தொழுகைகளுக்குப் பிறகு இரண்டு காயிப் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா கண்ணியத்திற்குரிய அப்துல் மஜீது டோகர் சாஹிப் உடையதாகும். இவர் ரப்வாவில் மிக நீண்ட காலம் இருந்து வந்தார். ஏறக்குறைய முழு வாழ்வையும் அங்கே தான் கழித்துள்ளார். ஒருவேளை தொழில் விசயமாக வெளியில் சென்றிருக்கலாம். எவ்வாறிருப்பினும் தற்போது சில நாட்களாக ஸ்வீடனில் வசித்து வந்தார். இவர் டிசம்பர் 23 ஆம் தேதி தனது 82 வயதில் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

கண்ணியத்திற்குரிய அப்துல் மஜீது டோகர் சாஹிப் ஹஸ்ரத் மாஸ்டர் சிராக் முஹம்மது சாஹிப் காரே (ரலி) அவர்களுடைய மகன் ஆவார். மேலும் அமீர் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்களுடைய பேரன் ஆவார். இவரது தந்தையும், தாத்தாவும் சஹாபாக்கள் ஆவர். இவரது தந்தை மாஸ்டர் சிராக் முஹம்மது சாஹிப் எனது சிந்தனையின்படி எனது தந்தை என்னிடம் கூறினார்கள். இவர்களது சகோதரர்கள் மத்தியில் தற்போது ஏதோ பிரச்சனை உள்ளது. எவ்வாறாயினும், எனது நினைவின்படி, மேலும் இதனைப் பற்றி இவரது பிள்ளைகளும் சாட்சி பகர்கின்றன. அதாவது மாஸ்டர் சிராக் முஹம்மது சாஹிப் அவர்கள் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹிற்கும் கற்றுக் கொடுத்து வந்திருக்கிறார்கள். மேலும் எனது தந்தை மற்றும் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் இருவரும் ஒரே வயது தான். இருவருக்கும் ஒன்றரை வயது வித்தியாசம் தான் இருக்கும். அவர்களும்

இவரிடம் படித்ததாக கூறினார்கள். இதனைப் போன்று சில மக்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹிற்கும் இவர் படித்து கொடுத்ததாகக் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், காரா காதியானுக்கு அருகில் தான் இருந்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்தவராவார். அப்துல் மஜீது டோகர் சாஹிப் இவருடைய மகன் ஆவார். டோகர் சாஹிப் பல்வேறு சிறப்பு அம்சங்களுக்கு சொந்தக்காரர் ஆவார். கிலாஃபத்துடன் விசுவாசம் மற்றும் பற்றுமிக்க தொடர்பு கொண்டிருந்தார். கிலாஃபத்தைப் பற்றி பேசப்படும் போதெல்லாம் கண் கலங்கி விடுவார் என கூறுபவர்கள் கூறுகின்றனர்.

முரப்பிகளுடனும், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடனும், அன்புடனும், கண்ணியத்துடனும் பழகி வந்தார். மேலும் நானும் இவரை பார்த்திருக்கின்றேன். எனக்கும் இவருடன் தொடர்பு இருந்தது. இவரது கண்களில் ஒரு அன்பும் பரிவும் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். மிகவும் சாதாரணமான நல்ல இயல்பினைக் கொண்ட பொருள் தியாகத்தில் முந்திக் கொண்டு பங்கு பெறக்கூடிய, தொழுகையைப் பேணக்கூடிய, தஹஜ்ஜுத் தொழக்கூடிய, துஆக்கள் செய்யக்கூடிய, எளிமையான, நல்ல சிறந்த நல்லொழுக்கங்களைக் கொண்ட மனிதர் ஆவார். ஏழைகளைப் பராமரிக்கக் கூடியவர். தப்லீகிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. தப்லீகின் வாய்ப்பினை ஒருபோதும் நழுவ விட்டதில்லை. இதுதான் தக்வாவின்படி செயல்படக்கூடிய மனிதருடைய ஓர் அடையாளமாகும்.

தப்லீகைப் பற்றி கூறுகின்றார்கள்: இவரது முபல்லிக் சாஹிபும் எழுதியுள்ளார். ஸ்வீடனுடைய அரசர், அமெரிக்க அதிபர் ஒபாமா மற்றும் போப்பிற்கும் இவர் கடிதம் எழுதியுள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானத்தையும் இவர் அனுப்பியிருந்தார். உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது, அந்த சமயத்தில் எல்லா மருத்துவருக்கும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானத்தைக் கொடுத்து வந்துள்ளார். யாருக்காவது பிரசுரம் கொடுத்தால் அதனை அவர் கண்டிப்பாக படிக்க வேண்டும் என வாக்குறுதி வாங்குவார்.

2005 -ல் நான் வஸிய்யத் பற்றி அறிவிப்பு செய்தேன். அதன் பிறகு நான் ஸ்வீடன் சென்றேன். அப்போது அவர் வஸிய்யத் செய்திருக்கவில்லை. டோகர் அனைவரும் வசதி படைத்தவர். அவர் மாசா அல்லாஹ். இவரது சகோதரரும், இவரது சந்ததிகளும் வசதி படைத்தவர்கள் ஆவர். அனைத்து டோகர் குடும்பமும் வஸிய்யத் செய்ய வேண்டும் என்றேன். இவரது சகோதரர்களும் பிள்ளைகளும் என்னிடம் கூறினர். இது எனக்கு நினைவில் இல்லை. அதாவது தாங்கள் டோகர்களை நான் விட மாட்டேன். அனைவரையும் வஸிய்யத் செய்ய வைத்த பின்னர் தான் விடுவேன் எனக் கூறியதாக கூறுகின்றனர். எவ்வாறாயினும் நான் கூறியதன் அடிப்படையில் குடும்பம் அனைத்தையும் ஒன்றுகூட்டி வஸிய்யத் செய்தனர்.

மேலும் ஹுஸுர் அவர்கள் எங்கள் மீதும் பிள்ளைகள் மீதும் மாபெரும் கருணை புரிந்துள்ளார்கள். எங்களை வஸிய்யத் செய்ய வைத்துள்ளார்கள் எனக் கூறி வந்தனர்.

ஸ்வீடனின் முபல்லிக் ஆகா யஹ்யா சாஹிப் கூறுகின்றார்கள்: இவர் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். இவரது நடை மற்றும் பேச்சின் மூலம் நிச்சயமாக இவர் ஒரு சஹாபியுடைய பிள்ளை என்பது நிரூபணமானது. தப்லீகில் அதிக ஈடுபாடு கொண்டவராவார். கிலாஃபத்துடன் நல்லதொரு தொடர்பு இருந்தது. மேலும் பிரசுரம் விநியோகிக்க வேண்டும் என நான் அறிவித்ததற்கிணங்க வினியோகிப்பதற்காக எப்போதும் தன்னுடன் பிரசுரத்தை வைத்திருப்பார். நேரத்தை வீணாக்க மாட்டார். மிசன் ஹவுஸ் உடைய நூலகத்திற்கு வந்து நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார்.

முரப்பி சாஹிப் பலமுறை டீ குடிக்க வாருங்கள் என்ற போது, நான் ஒரு ஓய்வு பெற்ற மனிதன் ஆவேன். தற்போது நேரத்தைக் கழிக்கின்றேன். உங்களுடைய நேரத்தை நான் ஏன் வீணாக்க வேண்டும். **முபல்லிக் உடைய நேரம் மிகவும் விலைமதிப்பற்றதாகும்** என்பார். அல்லாஹ் நமது பைஅத் உறுதிமொழியை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பினை வழங்குவானாக! மேலும் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! அவருடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய மலிக் சஃபீக் அஹ்மது சாஹிப் ஆர்கிடெக்ட் உடையதாகும். இவர் ஜனவரி 6 ம் தேதி வெர்ஜீனியா நியூ ஜெர்ஸியில் மரணமடைந்தார்கள். இறை அருளால் இவர் ஆரோக்கியமாகத்தான் இருந்தார். அங்கு ஒரு திருமணத்திற்காக சென்றிருந்தார். திருமணத்திற்கு இன்னும் நேரம் இருக்கிறது. முதலில் தொழுவோம் என தனது மகனிடம் கூறியுள்ளார். உளூ செய்து விட்டு வெளியே தான் வந்தார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவரது மகன் அப்போது Wash Room -ல் இருந்தார்.

வெளியில் ஒரு அஹ்மதி உட்கார்ந்திருந்தார். அவரிடம் எனது உடல் மோசமாகிக் கொண்டே செல்கின்றது என்று கூறினார். அவர் இவரை தூக்குவதற்காக முயற்சி செய்த போது இவர் கீழே விழுந்து விட்டார். அங்கு ஒரு மருத்துவரும் இருந்திருந்தார். அவர் இருதய மருத்துவர் ஆவார். அவர் வந்து இவரைப் பார்த்ததும் இது மாரடைப்பு என தெரிய வந்துள்ளது. அப்போது ஆம்புலன்ஸும் வந்தது. மருத்துவமனை சென்ற போது, இவர் மரணமடைந்திருந்தார். இன்னாலில்லாஹி வ இன்னாலில்லாஹி ராஜிவூன்.

இவரும் இவரது குடும்பமும், ஸியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவர். இவரது தாத்தா மலிக் மீர் முஹம்மது சாஹிப். 1924 -ல் பைஅத் செய்தார். இறை அருளால் அதன் பிறகு அஹ்மதிய்யத்தின் நல்லதொரு குடும்பமாக இருந்தது. அடுத்து 1968 -ல் இவர் பொறியாளர் பட்டம் பெற்ற பின்னர் Ministry of Defence -ல் இவர் பணியாற்றினார். 4, 5 வருடங்கள் லிபியாவிலும் பணிபுரிந்துள்ளார். லாஹுரில் அரசாங்க வேலையில் பணியாற்றி வந்தார். அங்கிருந்து ஓய்வு பெற்ற பிறகு அமெரிக்கா சென்று விட்டார். இந்த காலகட்டங்களிலும் ஜமாஅத் தொடர்பான பல தொண்டுகளைப் புரிந்துள்ளார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய காலத்தில் கட்டுமானப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அங்கும் இவருக்கு பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. தாருஸ் ஸியாபத்துடைய விரிவாக்கம் செய்வது, லஜ்னா ஹால் கட்டுவது, மஸ்ஜிது முபாரக் உடைய விரிவாக்கம், தாருல் கஸா உடைய கட்டடம் இதனைப் போன்று பைத்துல் ஹம்திலும் நல்லதொரு பங்கினை வகித்து வந்தார்.

2001 -ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மஸ்ஜித் பைத்துல் ஃபுதூஹ் -வில் சில மாற்றங்களை ஏற்படுத்த விரும்பிய போது ஆலோசனைக்காக இவர் இங்கு வரவழைக்கப்பட்டார். இங்கு நீண்ட நாள் தங்கியிருந்தார். இன்றைய நாட்களில் பிரேசில் உடைய மிசன் ஹவுஸ், கோயிட்டே மாலா மஸ்ஜிது, டிரெனிடாட் மஸ்ஜிது உடைய புராஜெக்டில் பணியாற்றி வந்தார். வக்ஃப் உடைய உணர்வுடன் இதனை செய்து வந்தார். இவர் வக்ஃப் செய்யவில்லை. ஆனால் ஓய்வு பெற்ற பிறகு தன்னை முழுமையாக ஜமாஅத் பணிக்காக அர்ப்பணித்திருந்தார். 2010 -ல் துப்பாக்கி சூடு நடைபெற்ற மாடன் டவுண் உடைய மஸ்ஜிது நூர் உடைய விரிவாக்கம் இவரது பொறுப்பில் இருந்தது.

இவரும் ஏழைகளுக்கு உதவக்கூடிய தைரியமிக்க ஜமாஅத் பணிகளுக்காக உடனே வரக்கூடிய மனிதர் ஆவார். இவரைப் பற்றி இவரது மனைவி ஜமாஅத்திற்கு எதிராகவும், கலீஃபாவுக்கு எதிராகவும் எந்தவொரு விசயத்தையும் இவர் சகித்துக் கொள்ளமாட்டார். அவ்வாறு கூறுவதை மிகவும் அதிகமாக வெறுத்து வந்தார். இவரது நாட்களின் ஆரம்பம் தஹஜ்ஜுத் மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதிலிருந்து தொடங்கும். இதில் அவர் அதிக கவலையை உணர்ந்து வந்தார். பெரும்பாலும் இரவில் ஜமாஅத் உடைய ஏதாவது நூல்களைப் படித்து விட்டு தான் உறங்குவார். இவரது மனைவி இவரைப் பற்றி பல்வேறு விசயங்களை எழுதியுள்ளார்.

நானும் ரப்வாவில் சில பணிகளை இவர் மூலம் செய்துள்ளேன். எப்போது கூப்பிட்டாலும் உடனே வந்து விடுவார். இவர் அரசாங்க பணியில் இருந்த போதிலும் கூட வந்து விடுவார். மிகவும் கடின உழைப்புடனும் கவனத்துடனும் ஒவ்வொரு வேலையையும் இவர் செய்து வந்தார். இன்றைய நாட்களில் பிரேசிலின் முபல்லிக்குடன் இவர் பணியாற்றி வந்தார். அவரும் இவரைப் பற்றி ஆச்சரியப்படும் வகையில் உழைப்பு மற்றும் பற்றுணர்வுடன் ஒவ்வொரு பணியையும் செய்து வந்தார் என எழுதியுள்ளார்.

அல்லாஹ் இவரது தர்ஜாவையும் மேம்படுத்துவானாக! மேலும் இவர்களது சந்ததிகளையும் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் தொடர்பு கொண்டிருக்கக் கூடியவர்களாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **11.01.2013**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456